அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 22/2021

எனது இலக்கம் : EST 5/6/9/11
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2021.11.22

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## அரசாங்க சேவையின் மற்றும் மாகாண அரசாங்க சேவையின் பதவிநிலை அலுவலர்கள் மற்றும் பதவிநிலையல்லாத அலுவலர்களை வகைப்படுத்தல்

"அரச சேவையில் சம்பளங்களின் திருத்தம் - 2016" என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்டுள்ள 2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 "அரசாங்க சேவையின் மற்றும் மாகாண அரசாங்க சேவையின் பதவிநிலை அலுவலர்கள் மற்றும் பதவிநிலையல்லாத அலுவலர்களை வகைப்படுத்தல்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள 2017.12.07 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 32/2017 இன் பால் தங்களது கவனத்தை தயவுடன் ஈர்க்கின்றேன்.

02. 2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இனை அமுல்படுத்தப்படும் திகதிக்கு முன்னர் காணப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் பதவிநிலைத் தரத்தில் சேர்க்கப்பட்டுள்ள பதவிகளை தொடர்ந்தும் பதவிநிலைத் தரத்தில் உள்ளவை எனக் கருதுவதற்கு 2021.07.05 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் 11.3 ஆம் பிரிவு மற்றும் 2017.12.07 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 32/2017 இன் 03ஆம் பிரிவின் கீழ் உள்ள 11.3 ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுதல் வேண்டும்.

> **"11.3 இச்சுற்றறிக்கை அமுல்படுத்தப்படும் திகதியில் நிலவிய ஏற்பாடுகளின் கீழ் பதவிநிலை தரத்திற்குட்பட்டுள்ள ஏதேனும் ஒரு பதவி தொடர்ந்தும் பதவிநிலை தரத்துடையதாக கருதப்படும்."**

03. இவ்வேற்பாடுகள் 2021.07.05 ஆந் திகதி முதல் வலுப்பெறுகின்றது.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு